## தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதகாரசபை - 2014

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை கொண்ட 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம், குறித்த சந்தர்ப்பங்களைத் தவிர, செலவினங்கள் வருமானத்திலிருந்து கழிப்பதன் மூலம் காட்டப்பட வேண்டியதாக இருக்கவில்லை. இருந்த போதிலும் வருமானம் மற்றும் செலவினம் புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக தேயிலை இலை விற்பனைகள் மற்றும் தாய்மாரின் சொட்டு மருந்துப் பகுதிகள் மற்றும் கந்தான பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகளை நடாத்துதல் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் தேறிய பெறுபேறுகள் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 4,162,477 மொத்தமான சில்லறை வருமானங்களில், 56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,331,811 ஆன தொகை வகைப்படுத்தாமல் சில்லறை வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம், தேயிலை தொழிற்சாலை வலையமைப்பின் விரிவாக்கலிற்காக 1998 முதல் 2001 வரையான காலத்தின் போது பெறப்பட்ட ரூபா 93,610,309 ஆன அரசாங்க மானியம் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை, இது கணக்குகளில் முற்கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், முறைப்படி சீராக்கப்படாமல் பிற்போட்ட வருமானமாக மீளாய்வாண்டின் நிதிசார் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

(அ) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊழியர்களுடைய சேவைக் காலம் ஒரு ஆண்டு பூர்த்தியான பின்னர் ஊழியர்களுடைய பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஊழியர்களுடைய சேவைக்காலத்தின் 6 ஆவது ஆண்டு தொடக்கத்தில் மொத்த ஏற்பாடுகள் செய்யப்படுதல் அதிகாரசபையின் கொள்கையாக உள்ளது. அத்தகையவாறு, அதிகாரசபை இந்த விடயத்தை கருத்திற் கொண்டிருக்காமையால் ஏற்பாடுகள் செய்கின்ற ஆண்டில் நிதிசார் விளைவுகளில் வழமைக்கு மாறான பாதிப்பின் சாத்தியம் உள்ளது.

(ii) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ஊழியர் சேவைக் காலத்தின் 6 ஆவது ஆண்டு தொடக்கத்தில் மொத்த ஏற்பாடுகள் செய்தல் அதிகாரசபையின் கொள்கையாக உள்ள போதிலும், மாத்தறை, கந்தானை மற்றும் இரத்தினபுரி பிராந்திய அலுவலகங்களில் முழுமையாக 5 ஆண்டு சேவைக் காலத்திற்காக சேவைக்காலத்தின் 5 ஆவது ஆண்டிலிருந்து முழுக் காலத்திற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை இலை மற்றும் தாய் மரங்களின் கொழுந்துகள் என்பவற்றின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,296,929 மற்றும் ரூபா 1,451,142 தொகையான வருமானம் மீளாய்வாண்டில் பிராந்திய அலுவலகங்களிலுள்ள கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தோட்டங்களின் தேயிலை கொழுந்துகள் மற்றும் தாய் மரங்களின் பொறுமதி மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களை தவிர தற்போது பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் சந்தைப் பெறுமதியில் வெளிப்படுத்துவதற்கு மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு தொடர்புபட்ட பட்டோலைகளுடன் 05 ஊழியர்களுடைய கடன்கள் மற்றும் முற்பணக் கணக்குகள் மற்றும் 02 கடன்கொடுத்தோர் கணக்குகள் என்பவற்றின் பேரேட்டு மீதிகளின் இணக்கத்தில் ரூபா 898,423 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 39,498,038 தொகையான கட்டிடங்களின் கிரயம் நிலையான சொத்துப் பதிவேட்டில் ரூபா 40,602,444 ஆக காட்டப்பட்டிருந்தது, ஆதலால், ரூபா 1,104,406 ஆன வித்தியாசம் அவதானிக்கப்படுகின்றது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கந்தான பயிற்சி நிலையத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 9,189,862 மற்றும் ரூபா 34,873,648 ஆகும் அதேநேரம், கணக்கீட்டுச் சபை அறிக்கைகளின் பிரகாரம், முறையே ரூபா 7,170,987 மற்றும் ரூபா 34,542,475 ஆகும். ஆகையால் ரூபா 2,350,048 ஆன வித்தியாசம் காணி மற்றும் கட்டிடங்களில் அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விபரங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெற்றிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| மீள்பட்டியலிடப்பட்ட மோட்டார் வாகனக் கடன்கள் | 7,688,482 | பட்டோலைகள் மற்றும் ஆதார ஆவணங்கள் |
| தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் என்போருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடன்கள் | 8,780,927 | - மேற்படி - |

## 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு முறையே ரூபா 34,465,672 மற்றும் ரூபா 3,057,868 பெறுமதியான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் 05 ஆண்டுகளிற்கு மேலாக அதிகாரசபையால் அறவிடப்பட்டோ அல்லது தீர்க்கப்பட்டோ இருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) (i) 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறு நிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | தேயிலை தொழிற்சாலைகள் தொடர்பான நடவடிக்கைகளாக தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்காத அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தின் நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டவை அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>சொல்லப்பட்ட அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு பெருந்தோட்ட அமைச்சிற்கு அதிகாரச்சட்டம் ஏற்கனவே தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் அதிகாரச் சட்டம் அமைச்சால் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு தொடர்பு படுத்தப்பட்டிருந்தது என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார். |
| (ii) 2003 இன் 34 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட தேயிலை சிறு நிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 2(ஆ)(ii) மற்றும் (iv) ஆம் பிரிவு | 13 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டிய பணிப்பாளர் சபைக்கு இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 207.48 மில்லியன் நேரொத்த பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 106.11 மில்லியன் மிகையில் விளைவித்திருந்தது. ஆதலால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 313.59 மில்லியன் முன்னேற்றத்தை காட்டுகின்றது. ரூபா 229.93 மில்லியன் திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் அதிகரிப்பு மற்றும் ரூபா 94.95 மில்லியனால் அபிவிருத்தி செலவினங்களின் வீழ்ச்சி என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்திருந்தது.

**3.2 அதிகாரசபைக்கு எதிராக/அதிரசபையால் அறிவுறுத்தப்பட்ட சட்ட நடவடிக்கை**

நான்கு ஊழியர்கள் ரூபா 3,115,116 மொத்தமான இழப்பீடு கோரி அதிகாரசபைக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்கள்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 தேயிலை உற்பத்திக்கு தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு**

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 338.03 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அவற்றில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 247.38 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 73.18 சதவீதமாகும். முன்னைய ஆண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 340.22 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அவற்றில் தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் 244.30 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 71.81 சதவீதம் பங்களிப்பு செய்திருந்தார்கள். அதன் பிரகாரம் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது 1.37 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**4.1.2 தேயிலை தோட்ட அபிவிருத்தி உதவுதொகைகள்**

சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான தேயிலை மீள் நடுகை மற்றும் புதிய மரநடுகை, விரிவாக்கல் சேவைகளின் ஏற்பாடுகள், சமூக அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் போன்ற அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட உதவுதொகைகளாக ரூபா 345.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்காகவும் தோட்ட அபிவிருத்தி கிரயம் மற்றும் அமுலாக்கல் கிரயம் என்பன கிழே தரப்படுகின்றன.

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்திக் கிரயம் (ரூபா மில்லியன்) | 345.1 | 440.0 | 276.3 | 208.0 | 189.2 |
| அமுலாக்கல் கிரயம் (ரூபா மில்லியன்) | 252.8 | 238.5 | 233.5 | 218.5 | 205.4 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ரூபா 1 இற்கான அமுலாக்கல் கிரயம் (ரூபா) | 0.73 | 0.54 | 0.85 | 1.05 | 1.08 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அபிவிருத்திக் கிரயம் ரூபா 94.9 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் அபிவிருத்தி கிரயத்தின் ஒரு ரூபா இற்கான அமுலாக்கல் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 0.19 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) தேசிய வேண்டுகையின் பிரகாரம், ஆகக் கூடிய விளைச்சலை பெறுவதற்கும் தேயிலைக் காணிகளை பேணுவதற்கும் 2,300 ஹெக்டெயர்கள் வருடாந்தம் மீள்நடுகை செய்யப்படவேண்டும். எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உதவு தொகை திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 720 ஹெக்டெயர்கள் மாத்திரம் மீள்நடுகை செய்யப்பட்டிருந்தது, 116,492 ஹெக்டெயர்கள் மொத்த முதிர்வடைந்த தேயிலைக் காணிகளிலிருந்து 0.62 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அந்த முதிர்வடைந்த தேயிலைக் காணிகளிலிருந்து 21,613 ஹெக்டெயர்கள் 25 ஆண்டுகளை விட பழமை வாய்ந்த மரங்களாக இருந்தது. புள்ளிவிரங்களிலிருந்தான தகவல்கள் சொல்லப்பட்ட மரநடுகைகளின் முழுப் பரப்பளவினதும் மீள்நடுகையின் அவசியத்தைக் காட்டியது.

(இ) மீளாய்வாண்டில் தேயிலை மீள்நடுகைக்காக வழங்கப்பட்ட உதவு தொகை ரூபா 258.09 மில்லியனானதுடன் இது ரூபா 391.75 மில்லியன் தொகையான எதிர்பார்க்கப்பட்ட உதவுதொகையின் 65.88 சதவீமாக இருந்தது.

### 4.1.3 பயிர்ச்செய்கை புனரமைப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள் நடுகைக்காக பின்வரும் சிபார்சு செய்யப்பட்ட முறைகளால் மரங்கள் ரூபா 0.8 மில்லியனிற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 0.271 மில்லியன் மரங்கள் மாத்திரம் ஆண்டின் போது நாட்டப்பட்டிருந்தது அது இலக்கிடப்பட்ட தொகையின் 34 சதவீதம் மாத்திரமேயாக உள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் பயிர்ச்செய்கை புனரமப்பிற்காக ரூபா 17.5 மில்லியன் தொகையான பயிர்ச்செய்கை உதவு தொகைகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5.9 மில்லியன் அல்லது எதிர்பார்த்த தொகையின் 44 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், உதவுதொகைகளிற்காக வழங்குவதற்கு 2,089 அனுமதிப் பத்திரங்கள் எதிர்பார்க்கப்பட்டது. இருந்த போதிலும், 1,498 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.1.4 தேயிலை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான சுழற்சிக் கடன் நிதியம்

மீளாய்வாண்டு தொடர்பான வருடாந்த அறிக்கையின் பிரகாரம், மத்திய வங்கி எஸ்டிஆர் 15.4 மில்லியன் ஒதுக்கியிருந்ததுடன் தேயிலை மரநடுகைக்காக 20 விண்ணப்பங்களிற்கான கடன்கள் மற்றும் தேயிலை சிறு நிலவுடமையாளர்களின் அபிவிருத்திக்காக செய்யப்பட்ட சுழற்சி நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது வர்த்தக நாற்றுமேடைகளிற்காக 02 விண்ணப்பங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.1.5 நிறுவனரீதியான தோட்ட நாற்றுமேடைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 08 தோட்ட நாற்றுமேடைகளின் செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 167,217 ஆன நேரொத்த தேறிய மிகைகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 52,154 ஆன தேறிய மிகையில் இருந்தன. ஆதலால் ரூபா 115,063 ஆல் மிகையில் குறைவை காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மரநடுகை நாற்றுமேடைகளின் மொத்த இலாப வீதம் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த 2.3 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 0.6 சதவீதமாக இருந்தது.

(இ) திஸ்பன நாற்றுமேடையில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 206,540 மற்றும் ரூபா 232,177 தொகையான நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டில் 07 நாற்று மேடைகளில் அழிந்துபோன செடிகளின் எண்ணிக்கை 150,754 ஆக இருந்ததுடன் மொத்த செடிகளின் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரகங்துங்கொட, கிகுலோயா மற்றும் வோகன் நாற்றுமேடைகளின் அழிந்த செடிகள் மீளாய்வாண்டின் போது அசாதாரணமாக அதிகரித்திருந்தன.

### 4.1.6 செயற்திட்ட உதவிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 19,880,000 ஆன தொகையில், புதிய மரநடுகை மற்றும் மீள்நடுகை, முறையான பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை காணிகளில் பயிர்ச்செய்கை புனரமைப்பு (நிரப்புதலில்) போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக 08 பிராந்திய அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 7,070,800 ஆன தொகை மற்றும் தலைமை அலுவலகத்தில் இருந்த ரூபா 6,211,877 ஆன தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் 08 மாவட்டங்களில் பயிர்ச்செய்கைக்காக புதிய மரநடுகை மற்றும் மீள்நடுகை, முறையான பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை காணிகளில் பயிர்ச்செய்கை புனரமைப்பு (நிரப்புதலில்) போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி உதவி ரூபா 21,608,880 ஆக இருந்ததுடன் உண்மையாக வழங்கப்பட்ட நிதி உதவி ரூபா 12,943,456 ஆக இருந்தது. இது 25 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

(இ) மண்பரிசோதனை உதவி செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 357,725,510 ஆன தொகையில் ரூபா 18,297,791 ஆன தொகை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் இருந்தது.

(ஈ) குறைந்த வருமானம் பெறுகின்ற பெண்களிற்கான தேயிலை செயற்திட்டத்திற்காக களுத்துறை பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 348,000 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த தொகை ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 பிராந்திய அலுவலகங்களில் உத்தியோகத்தர் விடுதிகள் மற்றும் தேயிலைக் காணிகள் உள்ளடங்கலாக முறையே ரூபா 23,161,486 மற்றும் ரூபா 55,302,611 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையாண்மை மீளாய்வாண்டு இறுதிவரையும் அதிகாரசபையின் உடமையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையுடன் காலி பிராந்திய அலுவலகத்திற்கு சொந்தமான வலகந்துவ உப அலுவலகம், நாற்று மேடை மற்றும் அக்மீமன தாய் தோட்டம் விரிவாக்கல் நிலையம் போன்றன உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2014 நவம்பர் 12 இல் ரெம்பிள் றீஸ் இல் நடைபெற்ற தேயிலை விவசாயிகள் கூட்டத்திற்காக ரூபா 5,908,811 தொகை செலவழித்தது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

அதிகாரசபையால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 422 ஆக இருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகள் உள்ளடங்கலாக மற்றும் உள்ளபடியான பதவியணி 430 ஆக இருந்தது. அத்திகதியில் 53 பதவிகளில் மிகையும் 51 வெற்றிடங்களும் இருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக வெற்றிடப் பதவிகள் பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி), முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) முகாமையாளர் (அபிவிருத்தி) மற்றும் முகாமையாளர் (பயிற்சி) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(ஆ) 2014/10 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிலுள்ள மிகையான பதவியணி 180 நாட்களை பூர்த்தியாக்கியிருந்த 22 ஊழியர்களை நிரந்தரமாக்கியமையால் 53 ஆக இருந்தது.

(இ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், தேயிலை விவசாயிகளிற்கான விரிவாக்கல் முகவர்களின் விகிதம் வினைத்திறனான விரிவாக்கல் சேவைகளிற்காக அண்ணளவாக 1:1000 ஆக இருக்க வேண்டும். இருந்த போதிலும், முன்னைய ஆண்டில் 1:2730 ஆக இருந்த இந்த விகிதம் 26 தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் நிலவியமை காரணமாக மீளாய்வாண்டில் 1:2736 வரை அதிகரித்தருந்தது.

**4.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

2014 நவம்பர் 19 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தில் அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இலலாத பதில் கடமை பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு நியமித்தல் மற்றும் படிகளை செலுத்துதல் தொடர்பில் விவாதிக்கப்பட்டிருந்தது. உதவி முகாமையாளரின் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) பதில் கடமை பதவியில் அவரை நியமித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகி படிகளை செலுத்துவது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு நெறிப்படுத்தல் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், அதிகாரசபை கணக்காய்வு திகதியான 2015 ஆகஸ்ட் 14 வரையும் நெறிப்படுத்தலை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான தொகைகளிற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5.2 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் குறைந்தது 03 மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய மீதிகள்
(ஆ) காசுக் கட்டுப்பாடு மற்றும் வங்கி கணக்கிணக்கங்கள்
(இ) உதவுதொகை கொடுப்பனவுகள்
(ஈ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவுகளும் அறவீடுகளும்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்